# May 1, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் அரசர் சார்லஸைச் சந்திக்கும் போது, கோஹினூர் வைரத்தை இந்தியாவுக்குத் திரும்ப ஒப்படைக்குமாறு அவரிடம் வலியுறுத்தப் போவதாக நியூயார்க் நகர மேயர் ஸோரான் மம்தானி தெரிவித்தார்.

(i) அமெரிக்க பயணத்தில் முதல்கட்டமாக வாஷிங்டன் சென்றடைந்த சார்லஸ், அரசி கமீலாவுடன் அதிபர் டொனால்ட் டிரம்ப் அளித்த விருந்தில் பங்கேற்றதுடன், அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்திலும் உரையாற்றினர். தொடர்ந்து, 9-11 பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நியூயார்க் நகருக்கு வந்தார்.

(ii) இந்நிலையில், நியூயார்க்கில் சார்லஸுடனான சந்திப்புக்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய ஸோரான் மம்தானி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இவ்விவகாரத்தை அரசரின் கவனத்துக்குக் கொண்டு செல்வது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

(iii) இக்கருத்து கோஹினூர் வைரம் மீது மீண்டும் கவனத்தைத் திருப்பியுள்ளது. இருப்பினும், இருவரின் சந்திப்பின் போது இவ்விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டதா என்பது குறித்த அதிகாரபூர்வத் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

(iv) உலகப் புகழ்பெற்ற 105.6 கேரட் எடையுள்ள கோஹினூர் வைரம், கடந்த 1849- ஆம் ஆண்டு இந்திய அரசர் துலீப் சிங்கால் விக்டோரியா அரசியிடம் வழங்கப்பட்டு, பிரிட்டன் அரச குடும்பத்தின் கிரீடத்தை அலங்கரித்து வருகிறது.

(v) நாட்டின் கலாசார அடையாளமாகக் கருதப்படும் இந்த வைரத்தை மீண்டும் இந்தியாவுக்குக் கொண்டு வர மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு ராஜீய முயற்சிகளை மேற்கொண்டு வரும் சூழலில், பரிசாகக் கிடைத்ததை திருப்பி அளிக்கப்போவதில்லை என பிரிட்டனும் திட்டவட்டமாக உள்ளது.

2. இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு (எஃப்டிஐ), கடந்த 2025-26 நிதியாண்டில் 9,000 கோடி டாலரைத் தாண்டி புதிய உச்சத்தை எட்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறைச் செயலர் அமர்தீப் சிங் பாட்டியா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

(i) அந்நிய முதலீடுகளைக் கவரும் வகையில் மத்திய அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், உலக நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், இந்தியாவின் அதிவேக பொருளாதார வளர்ச்சி ஆகியவை உலகளாவிய முதலீட்டாளர்களைப் பெரிதும் ஈர்த்துள்ளன.

(ii) கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாதங் களிலேயே, நாட்டின் மொத்த அந்நிய நேரடி முதலீடு 8,800 கோடி டாலரைத் தாண்டியுள்ளது.

(iii) மார்ச் மாதத்துடன் முடிவடைந்த முழு நிதியாண்டின் புள்ளிவி வரங்கள் மதிப்பிடும்போது, இது நிச்சயம் 9,000 கோடி டாலரை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

3. அமெரிக்க மத்திய வங்கியான 'ஃபெடரல் ரிசர்வ்', தனது வட்டி விகிதங்களை மாற்றமின்றி 3.50 முதல் 3.75 சதவீதம் என்ற அளவிலேயே நீட்டிப்பதாக அறிவித்துள்ளது.

(i) வட்டி வகிதத்தைத் தீர்மானிக்கும் மத்திய வங்கியின் ‘எஃப்ஓஎம்சி' குழுவின் கடந்த புதன்கிழமை நிறைவடைந்த 2 நாள்கள் கூட்டத்தில், இக்கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. அதேநேரம், வாக்கெடுப்பில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

(ii) 8 உறுப்பினர்கள் தற்போதைய வட்டி விகிதமே தொடர வேண்டும் என வாக்களித்தனர். ஆனால், ஸ்டீபன் மிரான், பிலிப் ஜெஃபர்சன், அன்னா பால்சன் உள்ளிட்ட 4 உறுப்பினர்கள் வட்டி விகிதத்தைக் குறைக்க ஆதரவு தெரிவித்தனர். 1992- ஆம் ஆண்டுக்குப் பிறகு இவ்வளவு பெரிய அளவிலான கருத்து வேறுபாடு கூட்டமைப்பில் நிலவுவது இதுவே

முதல் முறையாகும். மத்திய கிழக்கு போர், பொருளாதார நோக்கில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளதாக கூட்டத்துக்குப் பிறகு வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், மத்திய கிழக்கு போர் காரணமாக உலக அளவில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதன் விளைவாக, அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வட்டி விகிதத்தில் எவ்வித மாற்றமும் செய்யாமல் தற்போதைய நிலையே தொடரும் என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

(iii) கடந்த மார்ச் மாதத்தில், அமெரிக்காவின் நுகர்வோர் விலை குறியீட்டு (சிபிஐ) அடிப்படையில் பணவீக்கம் 3.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது கடந்த 22 மாதங்களில் இல்லாத உச்சமாகும். பிப்ரவரியில் இது 2.4 சதவீதமாக இருந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள திடீர் உயர்வு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

(iv) வாரியத்தில் தொடரும் ஜெரோம் பவல்:

- மத்திய வங்கியின் தற்போதைய தலைவர் ஜெரோம் பவல் அப்பதவியிலிருந்து விலகுவதாக முறைப்படி அறிவித்துள்ளார். இவரைத் தொடர்ந்து, அதிபர் டொனால்ட் டிரம்ப் பரிந்துரைத்த கெவின் வார்ஷ் புதிய தலைவராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- எனினும், மத்திய வங்கி வாரியத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து உடனடியாக விலகப்போவதில்லை என ஜெரோம் பவல் தெரிவித்துள்ளார். மத்திய வங்கி கட்டட புதுப்பித்தல் பணிகளில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரில் ஜெரோம் பவலின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை முழுமையாக முடிவடையும் வரை வாரியத்தில் நீடிக்கப்போவதாக அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.
- 'சரியான நேரத்தில் மட்டுமே வெளியேறுவேன்; தற்போதைய நிகழ்வுகள் என்னை இங்கேயே இருக்கத் தூண்டுகின்றன' என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

4. ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள 23- ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கான புதக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

(i) கிளாஸ்கோ நகரில் உள்ள கலைகளுக்கான கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், எடின்பர்க் இளவரசரும், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் துணைத் தலைவருமான எட்வர்ட் முன்னிலையில் பதக்கம் அறிமுகம் செய்யப்பட்டது.

(ii) கிளாஸ்கோவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், எடின்பாக் அரச முத்திரை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த பதக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

(iii) விருதுகள் பெற்ற வடிவமைப்பாளர் மிலிட்சா மிலென்கோவா இதனை உருவாக்கியுள்ளார்.

(iv) காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றிலேயே முதல்முறையாக,

பார்வை மாற்றுத்திறனாளிகளும் பதக்கத்தை தொட்டு உணரும் வகையில் 'பிரெய்லி' வடிவமைப்பும் இதில் இடம்பெற்றுள்ளது. 10 விளையாட்டுகள் மற்றும் 6 பாரா விளையாட்டுகளில் வெற்றிபெறுவோருக்காக 215 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. அதில் 47 பதக்கங்கள் பாராவிளையாட்டுகளுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளன. காமன்வெல்த் போட்டிகள் வரலாற்றில் இது அதிகபட்சமாகும்.

(v) கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், வரும் ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 2 வரை நடைபெறவுள்ளன.

5. மேற்காசிய பிரச்னைக்கு மத்தியிலும், கடந்த மார்ச்-ஏப்ரலில் நாட்டில் யூரியா உற்பத்தி 37.49 லட்சம் டன்களை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஈரானுடன் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் போரைத் தொடர்ந்து, அடுத்தடுத்து உருவாகி வரும் சூழலை விளக்கி, புது தில்லியில் மத்திய உரத் துறை இணைச் செயலர் அபர்ணா எஸ். சர்மா செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

- கடந்த மார்ச் மாதம் நாட்டில் 16.49 லட்சம் டன், ஏப்ரலில் 21 லட்சம் டன் என மொத்தம் 37.49 லட்சம் டன் யூரியா உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் கிட்டத்தட்ட இந்த அளவுக்கே யூரியா உற்பத்தி செய்யப்பட்டது. யூரியா பற்றாக்குறையை சமாளிக்க உலகளாவிய டெண்டர் வெளியிடப்பட்டு, சுமார் 37 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
- நிகழாண்டு காரீஃப் பருவத்தில் 390.45 லட்சம் டன்உரம் தேவைப்படும் நிலையில், அதில்சுமார் 50 சதவீதமான 193.38 லட்சம் டன் உரம் கையிருப்பில் உள்ளது. நாட்டில் உரங்கள் கிடைக்கக்கூடிய நிலை வலுவாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

6. திரவமாக்கப்பட்ட பெட்ரோலியம் எரிவாயு (எல்பிஜி), குழாய் வழியாக விநியோகிக்கப்படும் இயற்கை எரிவாயு (பிஎன்ஜி) ஆகிய இரு இணைப்புகளும் உள்ள வீடுகளை அடையாளம் காண ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

(i) இதுதொடர்பாக புது தில்லியில் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சக இணைச் செயலர் சுஜாதா சர்மா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

(ii) நாட்டில் எத்தனை வீடுகளில் எல்பிஜி, பிஎன்ஜி ஆகிய இரட்டை இணைப்புகள் உள்ளன என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பிஎன்ஜி இணைப்பையும் பெற்றுள்ள சுமார் 43,000-க்கும் மேற்பட்ட எல்பிஜி பயனர்கள், தற்போது எல்பிஜி இணைப்புகளைத் திரும்ப ஒப்படைத்துள்ளனர்.

(iii) இது குறைந்த எண்ணிக்கையாக உள்ள நிலையில், இது மேலும் அதிகரிக்க வேண்டும் என்று மத்திய அரசு எதிர்பார்க்கிறது என்று தெரிவித்தார்.

(iv) ஈரானுடன் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் போரைத் தொடர்ந்து, மேற்காசியாவில் இருந்து எல்பிஜி கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதையடுத்து எல்பிஜி, பிஎன்ஜி ஆகிய இரு இணைப்புகளையும் கொண்ட வீடுகள், எல்பிஜி இணைப்புகளை உடனடியாக ஒப்படைக்க வேண்டும்; குழாய் வழி எரிவாயு விநியோக வசதிக்கு அருகிலுள்ள வீடுகள் பிஎன்ஜி பயன்பாட்டுக்கு மாற வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டது. வீட்டு பயன்பாட்டுக்கு பிஎன்ஜி இணைப்பு கொண்டவர்கள், புதிதாக எல்பிஜி இணைப்புப் பெறவும் தடை விதிக்கப்பட்டது.

7. வியத்நாம் அதிபர் டோ லாம் மூன்று நாள் அரசுமு றைப்பயணமாக இந்தியாவுக்கு மே.5-ஆம் தேதி வரவுள்ளார்.

(i) புவி அரசியல் பதற்றங்கள் மற்றும் உலகளாவிய வர்த்தக இடையூறுகளுக்கு மத்தியில் பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் இருதரப்பு பேச்சு வார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

(ii) வியத்நாம் கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலராகவும் பதவி வகிக்கும் டோ லாம், தனது அமைச்சரவை சகாக்கள் மற்றும் உயரதிகாரிகள் குழுவினருடன் இந்தியாவுக்கு வருகிறார்.

(iii) ஏப்ரலில் அதிபராகப் பதவியேற்ற பிறகு இந்தியாவுக்கு அவர் மேற்கொள்ளும் முதல் அரசுமுறைப் பயணம் இதுவாகும்.

(iv) இருதரப்பு விரிவான உத்திசார் கூட்டுறவின்கீழ், பாதுகாப்பு, வர்த்தகம் முக்கியத் தொழில்நுட்பங்கள் உள்பட பல்வேறு துறைகளில் இரு தரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து பிரதமர் மோடியுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(v) பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேற்காசிய சூழல் மற்றும் சீனா ஆதிக்கம் செலுத்த முற்படும் தென் சீன கடல் பகுதியின் நிலவரம் உள்ளிட்டவையும் பேச்சு வார்த்தையில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(vi) ஹைட்ரோகார்பன் வளம் மிகுந்த தென் சீன கடல் பகுதிக்கு சீனா ஒட்டுமொத்தமாக உரிமை கோரும் நிலையில், வியத்நாம், பிலிப்பின்ஸ், புருணே உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த பிரச்னைக்கு சர்வதேச சட்டங்களின்படி அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா மற்றும் பிற ஜனநாயக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இந்தச் சூழலில், கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வழிகள் குறித்து பிரதமர் மோடியும், அதிபர் டோ லாமும் ஆலோசிப்பர் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(v) பிகாரில் உள்ள புத்த கயை, மகாராஷ்டிர தலைநகர் மும்பை ஆகிய இடங்களுக்கும் வியத்நாம் அதிபர் பயணிக்க உள்ளார்.

8. நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே மற்றும் இத்தாலி ஆகிய 4 ஐரோப்பிய நாடுகளுக்கு மே 15-ஆம் தேதி முதல் மே 20-ஆம் தேதி வரை பிரதமர் நரேந்திர மோடி 6 நாள்கள் அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) இதுகுறித்து தகவலறிந்த வட்டாரங்கள் மேலும் கூறுகையில், 'நார்வேயில் மே 15 மற்றும் 16-ஆம் தேதிகளில் நடைபெறும் மூன்றாவது இந்தியா-நார்டிக் மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். கடந்த ஆண்டு மே மாதமே இந்த மாநாடு நடைபெறவிருந்த நிலையில், பஹல்காம் பயங்கரவாத தாக்குதலால் ரத்து செய்யப்பட்டது.

(ii) மாநாட்டின் ஒரு பகுதியாக டென்மார்க், நார்வே, பின்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய 5 நார்டிக் உறுப்பு நாட்டுத் தலைவர்களுடன் பிரதமர் மோடி தனித்தனியே இருதரப்பு ஆலோசனைகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) மேற்காசிய பிரச்னையால் எரிசக்தி விநியோகத்தில் ஏற்பட்ட இடையூறு மற்றும் வர்த்தக பாதிப்புகளுக்கு உடனடி தீர்வு காண்பது குறித்து ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி விவாதிக்க வாய்ப்புள்ளது.

(iv) நெதர்லாந்து சுற்றுப்பயணத்தின்போது செமிகண்டக்டர்கள், செயற்கை நுண்ணறிவு, பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவை மேம்படுத்துவது குறித்து பிரதமர் மோடி ஆலோசனை நடத்தவுள்ளார். ஸ்வீடன் நாட்டுடன் நிலையான எதிர்

காலத்துக்கான புத்தாக்க திட்டங்கள் தொடர்பாகவும் இத்தாலியுடன் வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் முதலீடுகள் குறித்தும் அவர் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது என்றனர்.

(v) ஐரோப்பிய பயணத்துக்கிடையே பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகம் செல்ல வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும், பிரதமர் மோடியின் ஐரோப்பிய சுற்றுப்பயணம் தொடர்பாக அதிகாரபூர்வ அறிவிப்பு ஏதும் வெளியாகவில்லை.

9. இந்தியாவில் இருந்து திருடப்பட்ட ரூ.133 கோடி மதிப்பிலான 657 பழங்கால கலைப் பொருள்களை அமெரிக்கா திரும்ப ஒப்படைத்தது.

(i) இந்த அறிவிப்பை மன்ஹாட்டன் மாவட்ட அரசு தலைமை வழக்குரைஞர் ஆல்வின் பிராக் வெளியிட்பார். இதைத் தொடர்ந்து நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்வில் இந்திய பொருள்களை அமெ ரிக்கா ஒப்படைத்தது. இந்நிகழ்வில் இந்திய தூதரக அதிகாரி ராஜ லக்ஷ்மி கதம் கலந்துகொண்டார்.

(ii) சிங்கங்கள் இருபுறமும் இருக்கும் இரட்டை தாமரை பீடத்தில் அவலோகிதேசுவரர் அமர்ந்திருக்கும் ரூ.19 கோடி மதிப்பிலான வெண்கலச் சிலை, கடவுள் விநாயகரின் நடனமாடும் மணற்கல் சிலை, பாதுகாப்பை உணர்த்தும் வகையில் அபயமுத்திரையில் தனது வலதுகையை உயர்த்தியிருக்கும் ரூ.72 கோடி மதிப்பிலான புத்தரின் செம்மணற்கல் சிலை உள்ளிட்டவை தற்போது இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன.

10. மீன் உற்பத்தியில் இந்திய அளவில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளதாக இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்-மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (ஐசிஏ-ஆர்-சிஎம்எஃப்ஆர்ஐ தெரிவித்தது.

(i) 6.85 லட்சம் டன் மீன் உற்பத்தியை மேற்கொண்டு குஜராத்தை பின்னுக்குத் தள்ளி தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. இதுகுறித்து ஐசிஏஆர்-சிஎம்எஃப்ஆர்ஐ வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

- 2025-ஆம் ஆண்டில் இந்தியாவில் கடல்சார் மீன் உற்பத்தி 35.7 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. 2024-ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் கடல்சார் மீன் உற்பத்தி 3 சதவீதம் பளர்ச்சியடைந்துள்ளது.
- நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 6.85 லட்சம் டன் கடல்சார் மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பருவநிலை, நீட்டிக்கப்பட்ட மீன்பிடித் தடைக்காலம் மற்றும் புயல் போன்ற காரணங்களால் 1.5 சதவீத வீழ்ச்சியுடன் குஜராத் இரண்டாமிடத்துக்கு சென்றது.
- 6.24 லட்சம் டன் மீன் உற்பத்தியுடன் 2 சதவீத வளர்ச்சியை பதிவு செய்து கேரளம் மூன்றாமிடத்தில் உள்ளது. இதுதவிர பெரிய மாநிலங்களைப் பொருத்தவரை கர்நாடகம் 44 சதவீத வளர்ச்சியையும் மகாராஷ்டிரம் 18 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.
- 2025-இல் அதிகம் பிடிக்கப்பட்ட மீன் வளமாக 2.70 லட்சம் டன்களுடன் கானாங்கெளுத்தி மீன் முதலிடத்திலும், 2.57 லட்சம் டன்களுடன் தலைக்காலிகள் இரண்டாமிடத்திலும், 2.53 லட்சம் டன்களுடன் எண்ணெய் மத்தி மீன் மூன்றாமிடத்திலும் உள்ளன.
- நாட்டின் மொத்த கடல்சார் உற்பத்தியில் கேரளத்தின் பங்கு 17 சதவீதமாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

11. ராணுவத் தளவாடங்களை ஒருங்கிணைந்து உற்பத்தி செய்வதற்கான தொழில்

விதிகளை வகுக்க இந்தியாவும் இத்தாலியும் ஒப்புக்கொண்டன.

(i) இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இத்தாலி பாதுகாப்புத் துறை அமைச்சர் கைடோ க்ரோசெட்டோவை சந்தித்து பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை மேற்கொண்ட பிறகு இதில் உடன்பாடு ஏற்பட்டது.

(ii) இது தொடர்பாக ராஜ்நாத் சிங் வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், 'மேற்காசிய விவகாரம் உள்பட பல்வேறு சர்வதேச விவகாரங்கள் குறித்து இத்தாலி பாதுகாப்புத் துறை அமைச்சர் கைடோ க்ரோசெட்டோவுடன் விவாதித்தேன்

(iii) தற்சார்பு இந்தியா முன்னெடுப்பு மற்றும் இத்தாலியின் பாதுகாப்பு ஒத்துழைப்பு முன்னெடுப்பின் கீழ் ராணுவத் தளவாடங்களை ஒருங்கிணைந்து உற்பத்தி செய்வதற்கான தொழில் விதிகளை வகுப்பது தொடர்பாக இரு வரும் ஆலோசித்தோம்.

(iv) இருநாட்டு ராணுவங்களின் கூட்டு செயல்பாடுகளை அதிகரிக்கும் வகையில் இருதரப்பு ராணுவ ஒத்துழைப்புத்திட்டம் 2026-2027 கலந்துரையாடினோம் தொடர்பாகவும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

(v) இரு நாட்டு அமைச்சர்களின் ஆலோசனையில் குருகிராமில் உள்ள தகவல் ஒருங்கிணைப்பு மையம்-இந்திய கடல் பிராந்தியம் மூலமாக மேற்கொள்ளப்படும் தகவல் பரிமாற்றமும் இடம் பெற்றதாக பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் 'தெரிவிக்கப்பட்டது.

12. இந்தியா மற்றும் உலக அளவில் கட்சித் தாவல் தடைச் சட்டம்.

(i) ஆம் ஆத்மி கட்சி (AAP)

- தற்போதைய நெருக்கடி: ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 10 மாநிலங்களவை உறுப்பினர்களில், ஏழு பேர் கட்சியை விட்டு விலகி பாரதிய ஜனதா கட்சியில் (BJP) இணைந்துள்ளனர்.
- பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சியின் "மிகப்பெரிய வளர்ச்சிக்கு" முக்கிய காரணமாக ராகவ் சத்தா கருதப்பட்டார்; மேலும் அவர் அடுத்த தலைமுறைத் தலைவராகவும் பார்க்கப்பட்டார். இருப்பினும், முக்கியப் பொறுப்புகளிலிருந்து அவர் நீக்கப்பட்டபோது உட்கட்சிப் பூசல்கள் வெளிப்பட்டன; இது கட்சிக்குள் நிலவும் அதிகாரப் போராட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது.
- ஆம் ஆத்மி கட்சியின் நிறுவனர் அரவிந்த் கெஜ்ரிவால், உட்கட்சி ஜனநாயக ரீதியான மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமளிக்காத ஒரு ஒருங்கிணைந்த தலைமைத்துவத்தை உருவாக்க முயன்றார். இது யோகேந்திர யாதவ், பிரசாந்த் பூஷன் மற்றும் கிரண் பேடி போன்ற நிறுவனத் தலைவர்கள் கட்சியிலிருந்து முன்கூட்டியே விலகுவதற்கு வழிவகுத்தது.
- கட்சி மாறியுள்ள அந்த ஏழு உறுப்பினர்களும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், இந்த மாற்றம் நாடாளுமன்றத்தில் கட்சியின் பலத்தை மட்டுமல்லாமல், வரவிருக்கும் மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) கட்சித் தாவல் தடைச் சட்டம்: உலகளாவிய மற்றும் வரலாற்றுப் பின்னணி

- கட்சியில் பிளவுகள் ஏற்படுவதும், உறுப்பினர்கள் கட்சி மாறுவதும் இந்தியாவுக்கு மட்டுமே உரித்தான நிகழ்வுகள் அல்ல. பிரிட்டிஷ் நாடாளுமன்ற வரலாற்றில், வின்ஸ்டன் சர்ச்சில், ராம்சே மெக்டொனால்ட் மற்றும் வில்லியம் கிளாட்ஸ்டோன்

போன்ற முக்கியத் தலைவர்கள், தங்கள் கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகத் தங்கள் கட்சிச் சார்புகளை மாற்றிக்கொண்டனர்.

- இதேபோன்ற அரசியல் பிளவுகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடாளுமன்றங்களிலும் நிகழ்ந்துள்ளன.
- இந்தியாவின் அரசியலமைப்பு நிர்ணய சபையில் நடைபெற்ற விவாதங்களின்போது, கே.டி. ஷா மற்றும் லூபன் லால் சக்சேனா போன்ற உறுப்பினர்கள், ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, மக்கள் பிரதிநிதிகள் என்போர் வெறும் கட்சியின் பிரதிநிதிகள் மட்டுமல்ல, மாறாக மக்களின் பிரதிநிதிகள் ஆவர் என்றும்; எனவே அவர்கள் பொதுநலன் கருதிச் செயல்படுவதில் முழுச் சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும் என்றும் வாதிட்டனர்.

(iii) இந்தியாவில் கட்சித் தாவல் தடைச் சட்டம்

- "ஆயா ராம், கயா ராம்" காலகட்டம்: 1967 மற்றும் 1983-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், மாநிலச் சட்டமன்றங்களில் சுமார் 2,700 கட்சித் தாவல்கள் பதிவாகியுள்ளன. இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், கட்சி மாறிய 210 உறுப்பினர்களில் 116 பேருக்கு அமைச்சர் பதவிகள் வெகுமதியாக வழங்கப்பட்டன. "ஆயா ராம், கயா ராம்" (வந்தார் ராம், போனார் ராம்) என்ற இத்தொடர், ஹரியானா மாநிலச் சட்டமன்ற உறுப்பினரான 'கயா லால்' என்பவரிடமிருந்து உருவானது; இவர் ஒரே நாளில் மூன்று முறை தனது கட்சிச் சார்பை மாற்றிக்கொண்டார்.
- 1985 (52-வது சட்டத்திருத்தம்): இத்தகைய கட்சித் தாவல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அரசியலமைப்பில் 10-வது அட்டவணை சேர்க்கப்பட்டது. ஒரு உறுப்பினர் தனது கட்சியைத் தாமாக முன்வந்து விட்டுச்சென்றாலோ அல்லது கட்சியின் கொறடா உத்தரவுக்கு எதிராக வாக்களித்தாலோ, அவர் தகுதிநீக்கம் செய்யப்படுவார் என்று இது கட்டாயப்படுத்தியது; எனினும், உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒரே நேரத்தில் பிரிந்து சென்றால் மட்டும் இதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.
- 2003 (91-வது சட்டத்திருத்தம்): ஒரு கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் ஒன்றாகப் பிரிந்து சென்றால் மட்டுமே, அப்பிரிவு சட்டரீதியாக அங்கீகரிக்கப்படும் என்றும், அதன் மூலம் தகுதிநீக்கத்தைத் தவிர்க்க முடியும் என்றும் இச்சட்டம் மேலும் கடுமையாக்கப்பட்டது.
- ஆம் ஆத்மி (AAP) பிளவின் தாக்கம்: ஆம் ஆத்மி கட்சியிலிருந்து வெளியேறும் ஏழு உறுப்பினர்கள், அக்கட்சியின் 10 உறுப்பினர்களைக் கொண்ட மாநிலங்களவை பலத்தில் மூன்றில் இரண்டு பகுதியினராக அமைவதால், இவர்களின் இந்த நடவடிக்கை தற்போதைய கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் மீறலாகக் கருதப்படாமல், ஒரு சட்டபூர்வமான "பிளவாகவே" பார்க்கப்படுகிறது.

(iv) ஜனநாயகத்தின் மீதான தாக்கம்

- முகமைகளின் அழுத்தம்: கட்சியின் உட்கட்சி அதிருப்தி ஒரு காரணமாக அமைந்தாலும், 2024-ஆம் ஆண்டிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஆளும் கட்சியை நோக்கித் தள்ளுவதில், CBI மற்றும் ED போன்ற புலனாய்வு முகமைகளின் அழுத்தமும் ஒரு முக்கியப் பங்காற்றியுள்ளது.
- உட்கட்சி ஜனநாயகம் சிதைவடைதல்: கட்சிகள் உட்கட்சி ஜனநாயகத்திற்குப் போதிய இடமளிக்கத் தவறி, ஒரே ஒரு தலைவரை மட்டுமே மையமாகக் கொண்டு செயல்படும்போது, கட்சியில் பிளவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.
- இறுதியில், இந்த மக்கள் பிரதிநிதிகளுக்கு வாக்களித்த "ஆம் ஆத்மி" (சாதாரணப் பொதுமகன்), இத்தகைய அரசியல் நகர்வுகளை ஒரு அமைதியான பார்வையாளராக

மட்டுமே வேடிக்கை பார்க்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்.

13. புத்த பூர்ணிமா (மே 1, 2026 அன்று கொண்டாடப்படுகிறது)

(i) புத்தரின் போதனைகளின் அடிப்படைத் தத்துவங்கள்

- நான்கு பேருண்மைகள்: அனைத்துத் துன்பங்களுக்கும் ஆசையே காரணம் என்பதையும்; ஆசையை நீக்குவதன் மூலம் துன்பத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்பதையும்; எண்திறப் பாதையைப் (எண்வகை மார்க்கம்) பின்பற்றுவதன் மூலம் இதனை அடைய முடியும் என்பதையும் புத்தர் உணர்ந்தார்.
- ஐம்பெரும் ஒழுக்கங்கள் (பஞ்ச சீலம்): ஒரு நன்னெறிசார் வாழ்விற்கு இவை இன்றியமையாத கடமைகளாகும்: உயிர்க்கொலையைத் தவிர்த்தல், களவு செய்தலைத் தவிர்த்தல், பிறர் மனைவியை விரும்புதலைத் தவிர்த்தல், பொய் பேசுதலைத் தவிர்த்தல் மற்றும் மது அருந்துதலைத் தவிர்த்தல்.
- ஞானத்தின் பாதை: "உண்மையே வலிமை" என்றும், அனைத்துச் செயல்களுக்கும் மனமே அடிப்படை என்றும் புத்தர் போதித்தார்; எனவே, ஒருவர் நேர்மறைச் சிந்தனையைப் பயில வேண்டும் என்பதோடு, கற்பதை ஒருபோதும் நிறுத்தக்கூடாது.
- உலகளாவிய விழுமியங்கள்: "அன்பே உலகின் ஒளி" என்று குறிப்பிட்டு, அன்பு மற்றும் அகிம்சை (வன்முறையின்மை) ஆகியவையே உலகிற்கு இன்றியமையாத சக்திகள் என அவரது போதனைகள் வலியுறுத்துகின்றன.
- தன்னை வெல்லுதல்: பிரதமர் மோடியின் "மன் கி பாத்" (Mann Ki Baat) உரைகளைக் குறிப்பிடும் ஆதாரங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, தன்னைத்தானே வெல்வதே அனைத்து வெற்றிகளிலும் மிகச்சிறந்த வெற்றி என்று புத்தர் போதித்தார்.

(ii) தமிழ் இலக்கியத்தில் புத்தரின் தாக்கம்

- முதன்மைப் காப்பியங்கள்: ஐந்து பெரும் தமிழ் காப்பியங்களில் இரண்டான 'மணிமேகலை' மற்றும் 'குண்டலகேசி' ஆகியவை, புத்தரின் கொள்கைகளை விளக்குவதற்கும் உயர்த்திப் பிடிப்பதற்கும் முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவையாகும்.
- அறநெறி வழிகாட்டல்: மணிமேகலைக் காப்பியம் பௌத்த அறவியலின் சாரம்சத்தையும் சமூக சேவையின் முக்கியத்துவத்தையும் குறிப்பாக விவரிக்கிறது; பசியால் வாடுபவர்களுக்கு உணவளிப்பவர்களே உண்மையில் உயிரளிப்பவர்கள் என்று அது புகழ்பெற்ற வகையில் குறிப்பிடுகிறது.
- கல்விசார் படைப்புகள்: 'வீரசோழியம்' எனும் இலக்கண நூல், தமிழ்நாட்டில் பௌத்தத்தின் இருப்பைக் குறித்த வரலாற்று ஆய்வுகளுக்கு ஒரு முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது.
- புவியியல் சார்ந்த சான்றுகள்: அரிட்டாபட்டி (மதுரைக்கு அருகில்), காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் போன்ற தமிழ்நாட்டின் பல்வேறு இடங்கள், இன்றும் பௌத்த வரலாற்று அடையாளங்களையும் தொல்லியல் சான்றுகளையும் தன்னுள் கொண்டுள்ளன.

(iii) உலகளாவிய மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இருப்பு

- ஆசியக் கண்டம் முழுவதும் புத்தரின் செய்தியைப் பரப்புவதில் பேரரசர் அசோகர் மிக முக்கியப் பங்காற்றினார். அவரது மகனான மகேந்திரர், இப்போதனைகளை இலங்கைக்குக் கொண்டு சென்ற பெருமையைப் பெறுகிறார்.
- சாரநாத்தில் அமைந்துள்ள சிங்கத் தூண் (Lion Capital) போன்ற அக்காலகட்டத்தின் சின்னங்கள், இந்தியாவின் தேசியச் சின்னமாகவும், நாட்டின் தேசிய

அடையாளத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகவும் இன்றும் நிலைத்திருக்கின்றன.

- 5-ஆம் நூற்றாண்டில் 10,000 மாணவர்கள் மற்றும் 1,500 ஆசிரியர்களைக் கொண்டிருந்த நாளந்தா போன்ற பல்கலைக்கழகங்களின் வாயிலாக, இந்தியா உலகளாவிய கற்றல் மையமாகத் திகழ்ந்தது. காஞ்சிபுரமும் பௌத்த ஆய்வுகளுக்கான உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாக விளங்கியது.
- ஃபாசியன் மற்றும் சுவான்சாங் (ஹியூன் சாங்) போன்ற புகழ்பெற்ற சீனத் துறவிகள், இப்பல்கலைக்கழகங்களில் பயில்வதற்காகவும், பௌத்த நூல்களைச் சேகரித்துத் தங்கள் தாய்நாடான சீனாவிற்கு எடுத்துச் செல்வதற்காகவும் பல ஆண்டுகள் இந்தியாவில் பயணம் மேற்கொண்டனர்.

(iv) சமூக மற்றும் நிறுவன ரீதியான தாக்கம்

- பௌத்தப் பள்ளிகள் (பள்ளிகள்), மாணவர்களின் சமூகப் பின்னணியையோ அல்லது வேறு எந்தவிதமான பாகுபாடுகளையோ கருதாமல் அனைவருக்கும் கல்வி கற்பித்தமைக்காகப் பெரிதும் அறியப்பட்டன.
- பௌத்தத் துறவிகள், பொதுமக்களுக்கு இலவச மருந்து மற்றும் மருத்துவச் சிகிச்சைகளை வழங்குவதில் முன்னோடிகளாகத் திகழ்ந்ததோடு, விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் தியானப் பயிற்சிகளையும் கற்பித்தனர்.
- "அன்னதான" (உணவு நன்கொடை) மையங்களை நிறுவுவது ஒரு முதன்மையான கடமையாகக் கருதப்பட்டது; இக்கோட்பாடே பௌத்த சமயத்தை எளிய மக்களிடையே பரப்பப் பெரிதும் உதவியது